


**07. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. காவிரி பிரச்சனை உணர்வு ரீதியான பிரச்சனை என்பதால் இதனை சட்ட ரீதியாக அணுகுவதன் அவசியத்தை முதலமைச்சர் திரு. விஜய் வலியுறுத்தினார்.

2. மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாடு அரசு எவ்வித சமரசமும் செய்து கொள்ளாது என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்திற்கு உரிய நிதி பகிர்வை கோரும் அரசின் தனி தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

4. 12-ஆவது தேசிய கைத்தறி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த மூன்று நாட்களில் நான்கு அடி உயர்ந்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

*************

சட்டப்பேரவை

காவிரி பிரச்சனை உணர்வு ரீதியான பிரச்சனை என்பதால் இதனை சட்ட ரீதியாக அணுகுவதன் அவசியத்தை முதலமைச்சர் திரு.விஜய் வலியுறுத்தினார்.

காவிரியின் குறுக்கே, கர்நாடக அரசு மேகதாது அணை கட்டும் பிரச்சனை குறித்த, சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் போது சட்டப்பேரவையில் இன்று குறுக்கிட்டு பேசிய முதலமைச்சர் பேச்சுவார்த்தைகள் மூலம் சுமூக தீர்வு ஏற்படலாம் என்று தாம் கருதியதாகவும், எனவே பெங்களுரு சென்று பேச்சுவார்த்தை மேற்கொள்ள தாமே முடிவெடுத்ததாகவும் குறிப்பிட்டார்.

பகை நாடுகளே பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்போது அண்டை மாநிலங்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடத்துவது ஏற்புடையதாக இருக்கும் என்று தாம் எண்ணியதாக கூறினார்.

வாய்ஸ்

முன்னதாக இந்த தீர்மானத்தின் மீது பேசிய எதிர்கட்சித்தலைவர் திரு.உதயநிதி ஸ்டாலின், மேகதாது அணை கட்டுவது தொடர்பாக, தமிழக அரசுமேற்கொண்ட நடவடிக்கைகளை, அவையில் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இப்பிரச்சனையில், அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று, அனைத்து கட்சிகளும் வலியுறுத்தியபோதும், அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று கேள்வி எழுப்பிய அவர், கர்நாடகத்தில் அனைத்து கட்சிகளும் இப்பிரச்சனையில் ஒற்றுமையாக இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

த.வெ.க அரசு அமைந்த பின்னர் மேகதாது அணை கட்டும் திட்டத்தில், கர்நாடக அரசு, இதுவரை இல்லாத அளவிற்கு தீவிரம் காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டெல்டா மாவட்ட விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால், அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த தீர்மானத்தின்மீது பேசிய சட்டப்பேரவை அஇஅதிமுக கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி இப்பிரச்சனையில் புதிய நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்பதை அஇஅதிமுக அரசு ஏற்கவில்லை என்று கூறினார்.

பயிர்கள் பாதித்துள்ளதால் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தற்போது கர்நாடக அரசு அணையை திறக்கவில்லை என்றும் காவிரியில் வருவது உபரி நீர் தான் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த தீர்மானத்தின் மீது பேசிய மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு.செல்லசாமி

இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் திரு. தளி ராமசந்திரன்

பா.ம.க உறுப்பினர் திருமதி சௌமியா அன்புமணி உள்ளிட்டோர் மேகதாது பிரச்சனை தொடர்பாக தமிழக அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதால் எந்த தீர்வும் காண முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்கள்.

இதற்கு குறுக்கிட்டு பதில் அளித்து பேசிய அமைச்சர்கள் திரு.ஆதவ் அர்ஜுனா, திரு.நிர்மல் குமார், திரு.ராஜ்மோகன், திரு.கே.ஏ. செங்கோட்டையன் ஆகியோர் அவையில் அனைத்து கட்சி உறுப்பினர்கள் இருப்பதால் இதற்கான தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியதே போதுமானது என்றும் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறினர்.

தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி கூட்டத்திற்கு முதலமைச்சர் நாளை அழைப்பு விடுத்துள்ளதால் இது தொடர்பாக கருத்துக்கள் அங்கு தெரிவிக்க வாய்ப்புள்ளதாகவும் அமைச்சர்கள் எடுத்துரைத்தனர்.

மேலும் விவசாய பிரதிநிதிகளை இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு அமைச்சர்கள் சந்தித்து இதுதொடர்பாக பேச உள்ளதாகவும் அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜுனா கூறினார்.

*************

சட்டப்பேரவை -- ஆனந்த்

இந்த சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதில் அளித்த மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாடு அரசு எவ்வித சமரசமும் செய்து கொள்ளாது என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் உள்ள நான்கு அணைகளிலும் நீர்வரத்து உயர்ந்து வருவதாக கூறிய அவர், மேட்டூர் அணையில் போதுமான தண்ணீர் இல்லாததால் தான் குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்க இயலவில்லை என்றார்.

சூழ்நிலைக்கு ஏற்ப மேட்டூர் அணை பாசனத்திற்கு திறக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மேகதாது அணை விவகாரம் தொடர்பாக மத்திய அரசு கர்நாடகாவிற்கு எந்த அனுமதியும் அளிக்க கூடாது என்று அவர் வலியுறுத்தினார்.

வாய்ஸ்

*************

சட்டப்பேரவை - நிதி பகிர்வு

தமிழகத்திற்கு உரிய நிதி பகிர்வு உறுதி செய்யப்பட வேண்டும் என்று மத்திய அரசை கோரும் அரசின் தனி தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

அரசியலமைப்பு சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள நிதி சார்ந்த கூட்டாச்சி கொள்கைகளை நினைவு கூர்ந்து, மாநிலங்கள் தங்களது பொறுப்புகளை திறம்பட செயலாற்ற, நியாயமான, சமமான நிதி பகிர்வு முறை அவசியம் என்பதை வலியுறுத்தி, இந்த தனி தீர்மானத்தை மாநில நிதியமைச்சர் திரு. மரிய வில்சன் பேரவையில் தாக்கல் செய்தார்.

வரி பகிர்வில் வெளிப்படையான சமமான நடைமுறை பின்பற்ற வேண்டும் என்றும்,

இதற்கான அளவு கோல்கள் மாநிலங்களை பாதிக்க கூடாது என்றும் இந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

எதிர்காலங்களில் வரி பகிர்வு தொடர்பான ஏற்பாடுகளை செய்யும்போது, தமிழகத்தின் நியாயமான நிதி நலன்களை

பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த தீர்மானத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

*************

பேரவை இரங்கல்

முன்னதாக சட்டப்பேரவையில் முன்னாள் உறுப்பினர் மு. போடி சுருளிவேல் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

திரைப்பட இயக்குனர் கே.பாக்யராஜ்

கவிஞர் புவியரசு

பின்னனி பாடகி எஸ்.ஜானகி

எழுத்தாளர் பூமணி ஆகியோர் மறைவிற்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌனம் அனுசரித்தனர்.

*************

ஒத்திகை நிகழ்ச்சி

வரும் ஆகஸ்ட் 15ஆம் தேதி சுதந்திர தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி சென்னை மெரினா கடற்கரையில் முதற்கட்ட ஒத்திகை நிகழ்ச்சி இன்றுகாலை தொடங்கியது..

மூன்று கட்டங்களாக இந்த ஒத்திகை நடைபெற உள்ளது.

*************

கருணாநிதி

முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் 8ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி சென்னையில் திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில், கட்சியினர் அமைதி ஊர்வலமாக சென்று மெரினா கடற்கரையில் அன்னாரது நினைவிடத்தில் மலர்வலையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

*************

தேசிய கைத்தறி தினம்

உள்ளடக்கிய வளர்ச்சியின் ஆற்றல்மிகு கருவியாக கைத்தறி துறை திகழ்கிறது என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 12ஆவது தேசிய கைத்தறி தின விழாவில் இன்று உரையாற்றிய குடியரசு தலைவர் நம் நாட்டின் வளமான கலாச்சாரத்தையும், மரபுகளையும் இத்துறை பாதுகாப்பதோடு, வேலை வாய்ப்பு, மகளிர் ஆளுமை, கலை, போன்றவற்றை இத்துறை ஊக்குவிப்பதாக கூறினார்.

விடுதலை போராட்டத்தில் கைத்தறி முக்கிய பங்காற்றியதாகவும், நம் நாட்டின் பரவலாக்கல் தன்மையை இது பிரதிபலிப்பதாக்கவும், எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் படைப்பாற்றல் திறனுடன் செயலாற்றிய 22 சிறந்த நெசவாளர்களுக்கு குடியரசு தலைவர் விருதுகளை வழங்கி கவுரவித்தார்.

நாட்டின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் நினைவு அஞ்சல் தலைகளையும் அவர் வெளியிட்டார்.

இந்நாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில் கைத்தறி துறையின் பன்முக தன்மையை உலகம் முழுவதும் பறைசாற்றுவதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

பொதுமக்கள் கைத்தறி ஆடைகளுடன் தங்களது காணொலிகளை சமூக வலைதளங்களில் பகிரவும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் எதிர்கால கைத்தறி துறையை மறு வடிவமைக்க இளையோர் கலாச்சார மரபுகளையும், தொழில்நுட்பங்களையும், படைப்பாற்றலையும், தொழில் திறனையும், ஒருங்கிணைக்க மத்திய ஜவுளித்துறை இணை அமைச்சர் திரு.கிரிராஜ்சிங் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழகத்தில் நெசவாளர்களின் தயாரிப்புகளை சர்வதேச அளவில் சந்தைப்படுத்தும் தறி விற்பனை நிலையங்களை முதலமைச்சர் சென்னையில் இன்று தொடங்கிவைத்து நெசவாளர் விருதுகளையும் வழங்குகிறார்.

ஈரோடு விருதுநகர் உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு கைத்தறி விற்பனை கண்காட்சி இன்று தொடங்கியது.

சேலத்தில் கைத்தறி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

*************

நாடாளுமன்றம்

நீட் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் நாள்முழுமைக்கும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவை இன்று கூடியதும் அவைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 84ஆவது ஆண்டு தினம் நாளை மறுநாள் கடைபிடிக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

இதனை ஒட்டி சுதந்திரத்திற்காக இன்னுயிர் ஈந்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய அவர், அவர்களது துணிச்சலையும், தியாகத்தையும், அர்ப்பணிப்பையும் போற்றினார்.

தொடர்ந்து ராணுவம், உள்துறை, வர்த்தகம் சுகாதாரம் குடும்ப நலத்துறைகள் சார்ந்த நாடாளுமன்ற நிலைக்குழுவின் அறிக்கை அவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பூஜ்ஜிய நேரத்தை அவைத்தலைவர் எடுத்துக்கொள்ள முயன்றபோது, பல்வேறு பிரச்சனைகளில் அமளி நிலவியதால் மாநிலங்களவை நண்பகல் வரையிலும் பின்னர் நாள்முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

சிறு குறு நடுத்தர தொழில்கள் நிறுவனத்தின் மேம்பாட்டு மசோதாவிற்கு மக்களவை இன்று அனுமதி வழங்கியதை அடுத்து நாடாளுமன்றத்தில் இம்மசோதா நிறைவேறியது.

கடந்த திங்கட்கிழமை மாநிலங்களவை இந்த மசோதாவிற்கு ஒப்புதல் வழங்கியது.

ஊதிய தாமதத்தை கையாள்வது மற்றும் பிரச்சனைகளுக்கு சுமூக தீர்வு எட்ட இந்த மசோதா வகை செய்கிறது.

இதனிடையே நீட் உள்ளிட்ட விவகாரங்களில் எதிர்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக மக்களவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

*************

நீதி மன்றம்

டாஸ்மாக் மதுபான கடைகளில் கூடுதல் தொகை வசூலித்தால் சம்மந்தப்பட்ட ஊழியர்கள் மீது நுகர்வோர் புகார் அளிக்கலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரித்த நீதிமன்றம் புகார் மீது உடனடியாக வழக்கு பதிவு செய்ய காவல்துறைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

*************

மேட்டூர்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த மூன்று நாட்களில் நான்கு அடி உயர்ந்து 77.21 அடியாக இன்று அதிகரித்துள்ளது.

அணைக்கு நீர்வரத்து 18 ஆயிரத்து 875 கன அடியாக உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

இருவரி

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களில் பொது விநியோக திட்ட குறைதீர்க்கும் நாள் முகாம் நாளை நடைபெறுகிறது.

திருச்சி மாவட்டத்தின் அனைத்து வட்டங்களிலும் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், நீக்கம், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை பொதுமக்கள் இதில் மேற்கொள்ள ஆட்சித்தலைவர் திரு.பிரத்திக் தாயள் அறிவுறுத்தியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் ஆதரவற்ற பெண்கள், நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்வதற்கான சிறப்பு முகாம் வரும் 19ஆம் தேதி நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திருமதி கவிதா தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நாளை நடைபெறும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமில் இளைஞர்கள் பங்கேற்று பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் குமார் கூறியுள்ளார்.

*************

பேட்மிண்டன்

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் அஷ்மிதா சாலிகா, ரக்சிதா ஸ்ரீ ஆகியோர் இன்று முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்திய இணை – மலேசிய இணையை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது